வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632


விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.02.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 52 பக்கங்கள் : 12



# இலங்கை தனித்து செயல்பட முடியாது!

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, பெப்ரவரி 21

"உலகின் வேறு எந்த நாட்டையும்போல இலங்கையும் தனித்து செயல்பட முடியாது. உலகளாவிய இணைப்பு - ஒன்றையொன்று சார்ந்திருந்தல் ஆகியன இந்த பூகோளமயமாக்கல் யுகத்திலும்கூட ஒரு விதிமுறையாக உள்ளது. இலங்கை ஏனைய நாடுகளுடன் ஈடுபாட்டை பேணுவது அவசியம். இதற்கு உலகின் போக்குகளை சரியாக புரிந்துகொள்ளும் திறன் அவசியம்.", இவ்வாறு இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக் கிழமை நடந்த 'இனோவேசன் ஐலண்ட்' உச்சிமாநாட்டில் உரை யாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

முதலாவதாக இலங்கை ஒரு பெரும் மாற்றத்தின் தருணத்தில் உள் ளது. இலங்கையில் நடை பெற்ற இரண்டு தேர்தல்களின்

11



## அரியாலை மனித புதைகுழி நீதிவான் பார்வையிட்டார்!

யாழ்ப்பாணம், பெப். 21

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் உள்ள மனிதப் புதைகுழியை யாழ்ப் பாணம் மாவட்ட நீதிபதி ஏ. ஏ. ஆனந்த ராஜா நேற்று வியாழக்கிழமை பார்வையிட் டார்.

இதன்போது நல்லூர் பிரதேச செயலர், யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட் சகர், யாழ். தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலி ஸார், முறைப்பாட்டாளர் மற்றும்

11

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு!

சுமந்திரன் தெரிவிப்பு

வடமராட்சி, பெப். 21

உள்ளூராட்சி தேர்தல் முறையில் ஒரு கட்சி ஆட்சிய மைப்பது கடினமானது. இதனை தற்போது அனைவரும் ஏற்றுள்ளனர். எனவே, நாம் முன்னர் சிபாரிசு செய்தது போன்று தனியாக தேர்தலை சந்தித்து சேர்ந்து ஆட்சிய மைப்பது தொடர்பில் ஏனைய (தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பங்காளிகள்) கட்சிகளின் தலைவர்களுடன் பேசியுள்ளோம் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

11

மோ. சைக்கிளில் பயணிக்கும்போது

## மாணவர் தலைக்கவசம் அணிவது கட்டாயமானது!

மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 21

பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கி ளில் ஏற்றிச்செல்லும்போது தலைக்கவசம் அணியாது ஏற்றிச் செல்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதி பர் காளிங்க ஜெயசிங்கவிடம் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றையதினம் ஆளுநரின் செயலகத்தில் நடை பெற்ற கலந்துரையாடலிலேயே ஆளுநர் இந்த உத்தரவை விடுத்தார்.

11

## இனவாதம், மதவாதத்தை தூண்டுவதற்கு இடமில்லை

வடக்கு விகாரைகள் விவகாரம் குறித்து ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

"வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். குறு கிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர். இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக் காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு

11



## காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தீச்சட்டி போராட்டம்!

கிளிநொச்சி, பெப். 21

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கிளிநொச்சியில் தீச்சட்டி ஏந்திப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கிளி நொச்சி போராட்டம் நேற்றுடன் 8 ஆண்டுகள்

11

## வடக்கு பாடசாலைகளுக்கு 27ஆம் திகதி விடுமுறை!

யாழ்ப்பாணம், பெப். 21

வடக்கு மாகாணத்தின் சகல பாடசாலைகளுக் கும் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை சிறப்பு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும், 26ஆம் திகதி புதன்கிழமை மகா சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

11

## இலங்கை - இந்தியா இணைந்து சூரிய மின்னுற்பத்தி நிலையம்!

சம்பூரில் நிறுவுவதற்கு முடிவு

கொழும்பு, பெப். 21

திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோற் (கட்டம் I) மற்றும் 70 மெகாவோற் (கட்டம் II) சூரிய மின்னுற் பத்தி நிலையத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இரண்டு அரசுகளுக்கிடையில் மேற்கொள் ளப்படும் திட்டமாக இலங்கை மின்சார சபை

11

அரியாலை மனித புதைகுழி:

## அரசு விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்!

யாழ்ப்பாணம், பெப். 21

"அரியாலை மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்வ தற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எச்சங்கள் வெளி வந்த நிலையில் அது குறித்து யாழ்ப்பாண நீதி மன்றம் கவனம் செலுத்தியிருப்பது

11

வித்தியா கொலை வழக்கு:

## சுவிஸ் குமார் தப்பிக்க உதவிய பொலிஸாருக்கு 4 வருட சிறை!

- குமார. கோகுலன் -

வவுனியா, பெப். 21

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கின் முதன்மை சந்தேக நபர் சுவிஸ் குமார் தப்பிச் செல்ல உதவியகுற்றத்துக்கு முன்னாள் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க, முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் சிறீ கஜன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் முதன்மை குற்றவாளியான சுவிஸ் குமார் தப்பிச் செல்ல உதவியமை தொடர்பான வழக்கு

11

## பாதாள உலகத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை!

ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, பெப். 21

"பாதாள உலகக் கும்பலை முழு மையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதற்கு சிறிது காலம் எடுக்கும்", என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடந்த 10ஆவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் 2003 பேரை உள்ளீர்ப்பு செய்வதற்கு அனுமதி!

## அமைச்சரவை வழங்கியது

கொழும்பு, பெப். 21

அரச துறைகளில் நிலவும் 2003 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் இரண்டாவது அறிக்கையில், 11 அமைச்சுகளின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 5 மாகாண சபைகளில் 4 ஆயிரத்து 987 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இவற்றில், 2003 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்குறித்த விதந்துரையை அமுல்படுத்துவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ஐ)

# கணேமுல்லை சஞ்சீவ கொலை; பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 21

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாதாள உலக கும்பலை சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 25 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் அதிகாரி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவரை சுட்டுக் கொலை செய்வதற்கு சட்டத்தரணி வேடத்தில் சென்ற பிரதான சந்தேக நபருக்கு உதவி செய்த பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 184, 926 நாய்க்கடி சம்பவங்கள் கடந்த வருடத்தில் மட்டும் பதிவு

கொழும்பு, பெப். 21

கடந்த வருடம் 184,926 பேர் நாய்க்கடிக்கு சிகிச்சை பெற்றதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் - நாய் கடிக்கு சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் 850 முதல் 1,000 மில்லியன் ரூபாய் வரை செலவிட்டுள்ளது.

கடந்த வருடம் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நாய் கடி வழக்குகள் பதிவாகியுள்ளன - என்றார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை விரைவுபடுத்தவேண்டும்!

## தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முடிந்தளவு விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு இடையூறாக இருக்காது என்றும் அந்தக் கட்சி உறுப்பினர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, மிக விரைவாக தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவும் இதன்போது ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலானது அமைச்சரினால் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டது மாத்திரமல்லாமல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாமல் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது வரையில் இரண்டரை வருடங்கள் தேர்தல் கால தாமதமாகியுள்ளது. அடிமட்டத்திலான மக்கள் பிரதிநிதிகள் இன்மையினால் மக்களும் பெரும் சிக்கலை சந்தித்துள்ளார்கள்.

பழைய வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக பழைய வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கான திருத்தச் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தேர்தலை நடத்துவதற்கான உரிமை தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது.

இந்நிலையில் ஒரு சிலர் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கும் முயற்சித்து வருகிறார்கள். தேர்தலை நடத்துவதற்கு இருந்த சகல தடைகளையும் நிவர்த்தி செய்ததன் பின்னர் தேர்தலை ஒத்திவைக்க மீண்டும் முயற்சிக்கிறார்கள் என்றால் அது ஜனநாயகத்துக்கு எதிரான செயல்பாடாகும்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கும் அதிகாரத்துக்கமையவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமையவும் ஆணைக்குழுவால் முடிந்த தினத்தில் உள்ளூராட்சித் தேர்தலை மிக விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம். அதனை ஆணைக்குழுவும் ஏற்றுள்ளது. தேர்தல் ஆணைக்குழு இன்னும் திகதியை தீர்மானிக்கவில்லை - என்றார். (அ)

# காட்டு யானை தாக்கியதில் இரு முதியவர்கள் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 21

கால்வாயில் தவறிவிழுந்த காட்டு யானை மீட்கப்பட்ட பின்னர் குழப்பமடைந்து குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து நடத்திய தாக்குதலில் இரு முதியவர்கள் உயிரிழந்தனர்.

பொலநறுவை, மாதுறு ஓயா நேற்று வியாழக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அந்தப் பகுதியிலுள்ள கால்வாயில் காட்டு யானை ஒன்று தவறி விழுந்துள்ளது. இதனால் பிரதேவாசிகள் சிலர் இணைந்து யானையை மீட்டு கரையேற்றினர். இதன்போது, திடீரென குழப்பமடைந்த யானை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் வீடு ஒன்றில் வசித்த முதியவர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்தனர். சகோதரர்களான 82 வயது மூதாட்டியும் 74 வயது முதியவருமே உயிரிழந்தனர்.

# பாடசாலை மாணவர்களிடமிருந்து துப்பாக்கி தோட்டாக்கள் மீட்பு!

கண்டி, பெப். 21

பாடசாலை மாணவர்கள் சிலரிடமிருந்து 30 துப்பாக்கி தோட்டக்கள் மீட்கப்பட்டன என்று கண்டி , ஹசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

ஹசலக்க பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றின் அருகே விளையாடிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் சிலர், மரப்பலகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் தோட்டாக்கள் இருப்பதை கண்டு அதனை சரிசமமாகப் பிரித்துக்கொண்டு தங்களது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒரு மாணவன் தனது வீட்டுக்குச் சென்று சமையலறையில் இருந்த அடுப்பில் தோட்டாக்களை வைத்துள்ளான். அப்போது, அந்தத் தோட்டாக்கள் வெடித்துள்ளன.

இதையடுத்து, வீட்டார் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளனர். மாணவனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தோட்டாக்களை தாங்கள் கண்டெடுத்து சரிசமமாக பிரித்தமை தெரிய வந்தது.

இதையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மாணவர்களிடமிருந்து 30 தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சஞ்சீவ கொலை சந்தேகநபர் தில்ஷான் என அடையாளம்!

கொழும்பு, பெப். 21

கணேமுல்லை சஞ்சீவ கொலை சந்தேகநபர் சமிந்து தில்ஷான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், சஞ்சீவ கொலை சந்தேகநபர் கொழும்பு - மஹரகமவை சேர்ந்தவர். கடந்த இரு வாரங்களில் இடம்பெற்ற பல கொலை சம்பவங்களுடன் இவருக்கு தொடர்பு உண்டு என்றும் கூறினார்.

புத்தளம் - பாலவியில் அவர் கைதானபோது அஸ்மான் ஷெரிப்தீன் (34) என்றே பொலிஸாரால் அறிவிக்கப்பட்டார். ஆனால், சந்தேக நபர் பல மாற்றுப் பெயர்களையும், பல அடையாள அட்டைகளையும் பயன்படுத்தியிருப்பது தெளிவாகிறது. முதலில் அவர் முகமது அஸ்லம் ஷெரிப்தீன் என்றும் பின்னர் சமிந்து தில்ஷான் பியுமாங்க கண்டனாராச்சி என்றும் கண்டறியப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# சொகுசு வாகனங்களை வாடகைக்கு வாங்கி விற்பனை செய்தவர் கைது!

கொழும்பு, பெப். 21

சுமார் 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொகுசு வாகனங்களை வாடகைக்கு எடுத்து மற்றவர்களுக்கு விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவ்வாறு விற்கப்பட்ட 30 வாகனங்களுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக அதுருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், வாடகைக்கு வாகனங்களை வழங்கும் சேவைகளை அணுகி, போலி நிறுவனத்தின் பெயரில் ஆவணங்களை வழங்கி சொகுசு வாகனங்களை வாடகைக்கு எடுத்துள்ளார்.

அத்துடன், தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலைக்கு அந்த வாகனங்களை மற்றவர்களுக்கு விற்றதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் அதுருகிரிய பகுதியில் வசிப்பவர் என்றும், அவர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சொகுசு வாகனங்களை நிறுத்தி வைத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

குறித்த நபர், ரூ. 25 மில்லியன் மதிப்புள்ள வாகனத்தை ரூ. 20 மில்லியனுக்கு விற்பனை செய்து வாகன உரிமை ஆவணங்கள் விற்பனைக்குப் பிறகு சில நாட்களில் ஒப்படைக்கப்படும் என்று கூறி தனிநபர்களை ஏமாற்றியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. (அ)

# கணேமுல்லை சஞ்சீவவின் சடலத்தை பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை

கொழும்பு, பெப். 21

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்லை சஞ்சீவ' வின் சடலத்தை பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை என வாழைத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணேமுல்லை சஞ்சீவவின் மனைவியும் சடலத்தை பொறுப்பேற்க மறுத்துவிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், கணேமுல்லை சஞ்சீவவின் சடலம் பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
21.02.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வன்முறை கும்பல்களை அரசு அகற்ற வேண்டும்

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்மீது நடப்பட்ட தாக்குதலில் ஓய்வுநிலை அதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருக்கின்றார். இந்தப் பகுதியில் ஏற்கனவே பலர் இவ்வாறான சம்பவங்களை எதிர்கொண்டிருக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மதுபான சாலைகள் அதிகரித்திருக்கின்ற நிலையில் மதுப் பாவனையாளர்களும் இரவு வேளைகளில் அதிகமாக நடமாடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வன்முறைக் கும்பல்கள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்திருக்கும் விடயம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் விடயம்தான். வாள்வெட்டு, காதல் விவகாரத்துக்காக ஆட்களை கடத்துதல், தனிப்பட்ட பகைக்காக துப்பாக்கியால் சுடுவது போன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் பதிவாகியிருக்கின்றன. கடந்த காலத்தில் போதைவஸ்து பாவனை அதிகரிப்பு தொடர்பான விடயங்கள் பேசுபொருளாக இருந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் திட்டமிட்டு வெளியாரால் புகுத்தப்பட்ட விடயங்களாகவே நோக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக பல புதிய மதுபான சாலைகள் குறிப்பாக கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் திறக்கப்பட்டன. இவைகள் எந்த வெளியாரால் புகுத்தப்பட்டன? இது தொடர்பில் அரசியல் மேடைகளிலும் ஒருவரை ஒருவர் விமர்சித்து தங்களின் அரசியலை மேற்கொண்டனர். அதிலிருந்து இந்த விடயத்துக்கும் வெளியாருக்கும் ஒரு தொடர்புமில்லை என்பது தெளிவானது.

வன்முறைகள் தங்களுக்கு நடக்கும்போது அது ஒரு விடயமாக நோக்கப்படுவதும் மற்றவர்களுக்கு நடக்கும்போது. அது நமக்கு சம்பந்தம் இல்லாத விடயமாக நோக்கப்படுவதுண்டு. வடக்கைச் சேர்ந்த அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினரும் கடந்த காலங்களில் இந்த அடிப்படையில்தான் இந்த விடயத்தை சாதாரணமாக கடந்து சென்றிருக்கின்றனர். அரசியல் விடயங்கள் தொடர்பில் தங்களின் மூக்கை அடிக்கடி நுழைக்கும் சிவில் சமூக அமையங்கள் சமூகம் தொடர்பில் அக்கறையற்றவர்களாவே இருப்பதுண்டு.

ஆசிரியர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பாதிக்கப்படும்போது ஆசிரியர் சங்கம் கண்டனம் வெளியிட்டிருக்கின்றது. ஆனால், மற்றவர்கள் பாதிக்கப்படும்போது வன்முறைக் கும்பல்களின் செயல்கள் சாதாரணமாக மறக்கப்பட்டு விடுகின்றன.

அவ்வாறில்லாது, இது தமிழ் சமூகத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கும் ஒரு நோய் இதற்கு ஆரம்பத்திலேயே உரிய மருத்துவம் செய்யாவிட்டால் காலப்போக்கில் வன்முறைக் கும்பல்கள் அனைத்தின்மீதும் மேலாதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டு விடலாம். அரசியல் விடயங்களிலும் இவ்வாறான வன்முறைக் கும்பல்கள் உள்நுழையும் காலம் வெகுதொலைவில் இல்லை.

வடக்கு மாகாண ஆளுநர், பொலிஸ் திணைக்களம், அரசியல் தரப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் அனைவருமாக இணைந்து, இந்த விடயத்தில் செயலாற்ற வேண்டும். பொலிஸார் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனை பொதுவெளிக்கு கொண்டுவந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஒரு பிரச்னையை சமூக மயப்படுத்தினால்தான் அந்தப் பிரச்னைக்கான தீர்வைக் காண முடியும்.

## மதுபோதை கும்பல் தாக்குதல்; ஓய்வுபெற்ற அதிபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 21

மதுபோதையிலிருந்த கும்பல் தாக்கியதில் படுகாயமடைந்த ஓய்வுபெற்ற அதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பூநகரி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரான விசுவாசம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை பூநகரி அதிபருடன் முன்னாள் அதிபரும் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயம் தனங்களப்பு பகுதியில் மதுபோதையில் நின்ற குழு இருவரையும் மறித்துத் தாக்கியுள்ளது.

இதில், இருவரும் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில், உயிரிழந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## மன்னார் கடலில் கைதான இந்திய மீனவருக்கு மறியல்

மன்னார், பெப். 21

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நால்வரையும் எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று அதிகாலை மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்த தமிழ்நாடு, இராமேஸ்வரம், காந்திநகர் பகுதியை சேர்ந்த 4 மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர். இவர்கள் நால்வரும் மாவட்ட நீரியல்வள அதி காரிகள் மூலமாக மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் நான்கு மீனவர்களையும் எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(தொடர்புடைய செய்தி 12ஆம் பக்கத்தில்) (ஐ)

## கட்டாக்காலி நாய்களால் வெங்காய பயிர் அழிவு!

வடமராட்சி, பெப். 21

புலோலி மேற்கு தம்பசிட்டி பகுதியில் கட்டாக்காலி நாய்கள் வெங்காயப் பயிரை கிண்டிக் கிளறி அழித்து வருகின்றன. இதனால், தாம் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடத்தின் பிற்பகுதியில் பெய்த மழையால் ஏற்பட்ட காலமாற்றத்தால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பருவம் பிந்தியே வெங்காயப் பயிர் செய்கை இடம்பெறுகிறது.

வெங்காயப்பயிர் விளைந்து வரும் இத் தருணத்தில் கட்டாக்காலி நாய்கள் தோட்டத்துக்குள் உட்புகுந்து பயிர்களை கிண்டிக்கிளறி அழித்து வருகின்றன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பயிர் அழிவை எதிர்கொள்வதுடன் பெரும் நட்டமடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (ஐ-02)

## தினக்குரல் பத்திரிகையின் நிறுவுநர் சாமி காலமானார்!



யாழ்ப்பாணம், பெப். 21

பிரபல தொழிலதிபரும் 'தினக்குரல்' பத்திரிகையின் நிறுவு நருமான எஸ். பி. சாமி தனது 89 ஆவது வயதில் காலமானார்.

வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் காலமானார் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அன்னாரின் பூதவுடல் 4 மணிக்கு நல்லூர் செட்டித் தெருவிலுள்ள அவரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர். (ஐ)

## சட்டவிரோத மீன்பிடி; நந்திக்கடலில் 6 பேர் கைது!


முல்லைத்தீவு, பெப். 21


வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகு, வலைகள், கூட்டு வலைகளை பயன்படுத்தி தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் இருவர் சிறார்கள் என்பதால் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய நால்வரும் நீதிமன்ற உத்தரவின் கீழ் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**இடபம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**சிம்மம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். இனிமையான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்க காதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும்.

**தனுசு**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதரர் வகையில் மனத்தாங்கல் வரும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை.

**மகரம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்**
உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். முயற்சிகள் பலிதமாகும்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் வழங்க ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.21

சமூக சேவை அமைப்பான பெர்மிட் நிறுவனத்தின் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழில் நடைபெற்றது. இதன்போது, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் காலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

சமூகத்தில் பொருளாதார மட்டத்தில் நலிவடைந்த குடும்பங்கள் மற்றும் அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சித் திட்டங்களை குறித்த நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. இத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. மேலும், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்திவரும் சக்கர நாற்காலி மற்றும் மூன்று சில்லு துவிச்சக்கரவண்டி என்பன திருத்த வேண்டி ஏற்படும் போது அதனை குறித்த நிறுவனத்தின் அனுசரணையில் இலவசமாக திருத்தி வழங்குவது தொடர்பான பொறிமுறையும் ஆராயப்பட்டதுடன் இதன் விவரங்களை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக விரைவில் அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, பெர்மிட் நிறுவன இலங்கைக்கான இணைப்பாளர் நயனி சூரியாராச்சி, சமூக சேவை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் ந. ரதிகுமார், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கி. தயாபரி மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (எ-05)


# 30 போதை மாத்திரைகளுடன் யாழில் நேற்று ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை, இலந்தைக்குளம் பகுதியில் நீண்ட காலமாக போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, அவரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-05)



# இளவாலை புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.21

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 23 ஆவது நிகழ்வு நாளை 22 ஆம் திகதியும் நாளை மறுதினம் 23 ஆம் திகதியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதில், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 03.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாம் நாள் மாலை நிகழ்வு "ஈழத்து நூல்களை அறிவோம்" எனும் தொனிப்பொருளில் புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் அண்ணாவியார் மிக்கேல் நீக்கிலாரின் நினைவு அரங்கில் இளவாலை திருமறைக் கலா மன்றத்தின் இணைப்பாளர் செ. பீ. பியன்வெனு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை வி. சிறீரஞ்சனியின் "மீராவின் தம்பி" சிறுவர் இலக்கியம் தொடர்பில் எழுத்தாளரும் ஆசிரியருமான சிறிலேக்கா பேரின்பகுமாரும், "சிறகை விரித்துப் பறப்போம்" சிறுவர் நூல் பற்றி ஓய்வுநிலை ஆசிரியர் விஜயா பீரிஸூம், சுந்தரமடம் அ. அஜந்தனின் "மரணங்களின் சாட்சியாக" சிறுகதைத் தொகுதி தொடர்பில் எழுத்தாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான டயானா நியூட்டனும் "ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்" நூல் பற்றி கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபரும் ஆற்றுப்படுத்துநருமான பொன்னையா அரவிந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் நோபேட் உதயகுமார் அபிதாவின் நெறியாள்கையில் விசேட நடன நிகழ்வும், சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு. கணேசராசாவின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் "என்னவென்று சொல்வேனடி" மற்றும் மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் "முட்டை" ஆகிய நாடகங்களும் அரங்கேறவுள்ளன. (எ)

# "கனிய மணல் அகழ்வுக்கு இடமளிக்கப்படாது"

மன்னார், பெப்.21

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வியல் மற்றும் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் கனிய மணல் அகழ்வுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. இது மக்களுக்கான அரசாங்கம். எனவே, மன்னார் மக்கள் கிலேசம் அடையத் தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் நேற்று முன்தினம் கனிய மணல் ஆய்வுப் பணிக்கு வருகை தந்த குழு தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னாரில் கனிய மணல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக குறித்த ஒரு நிறுவனம் ஆய்வினை மேற்கொள்ள வந்ததாக தகவல் கிடைத்திருந்தது. இது தொடர்பில் உடனடியாக குறித்த அமைச்சுக்களுக்கு தெரியப்படுத்தியதுடன், சபை முதல்வர் விமல் ரத்நாயக்காவின் கவனத்துக்கும் கொண்டு வந்து உடனடியாக அந்த செயல்பாட்டை நிறுவதற்குரிய பணிப்புரையை விடுத்திருந்தோம் என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பாராளுமன்றுக்கு வரும் ரணில் விக்கிரமசிங்க?

கொழும்பு, பெப். 21

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வருட இறுதிக்குள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



அதன்படி, புதிய ஜனநாயக முன்னணி சார்பில் தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய பட்டியல் உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்வதன் மூலம் ஏற்படும் வெற்றிடத்தை ரணில் விக்கிரமசிங்க நிரப்பவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின் எதிர்க்கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் சிலரும் அவருடன் இணைய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத்துக்கு வருகை தருமாறு ஏற்கனவே சில கட்சிகள் முன்மொழிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பாடசாலை மாணவி ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 21

அம்பலாங்கொடை குருந்துவத்த பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பாடசாலை மாணவி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த மாணவி எல்பிட்டிய குற்றப்பிரிவு அதிகாரிகளால் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிறுமி அம்பலாங்கொடையில் உள்ள ஒரு அரசுப் பாடசாலையொன்றில் கல்வி கற்கும் 17 வயது மாணவி என தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறுமியின் சகோதரர் மூன்று நாட்களுக்கு முன்னர் வீடு திரும்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் இல்லாத நேரத்தில், அவரது மனைவி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நீதிமன்றினுள் இடம்பெற்ற படுகொலை மிகப்பாரதூரம்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

நீதிமன்றத்தினுள் கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்ட சம்பவம் மிகப்பாரதூரமானது எனவும், இது குறித்து உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வை வழங்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கணேமுல்ல சஞ்சீவ, நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கு வழக்கொன்றுக்காக அழைத்துவரப்பட்டு, சாட்சிக்கூண்டில் நிறுத்தப்பட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிக்கையில்-இது மிகப்பாரதூரமான விடயம். இதுகுறித்த பொறுப்பை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மிகவலுவான பாதுகாப்புக்கு மத்தியில் தான் "கணேமுல்ல சஞ்சீவ" அழைத்துவரப்பட்டார். இருப்பினும் தற்போது நீதிமன்ற அதிகாரிகளுடன் கலந்துரையாடி, இப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டியிருக்கிறது. இங்கு பாதாள உலகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒருவர் மாத்திரமன்றி, மேலும் பல அப்பாவி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே இச்சம்பவம் தொடர்பில் நாம் பொறுப்பேற்றுக்கொள்வதுடன், இதுகுறித்து வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்தமுடியும். படுகொலைகள் உள்ளிட்ட இவ்வாறான சம்பவங்கள் எமது ஆட்சியில் மாத்திரமன்றி, கடந்த காலங்களிலும் இடம்பெற்றன. இருப்பினும் அவற்றுக்கு உரியவாறு தீர்வு காண்பது எமது பொறுப்பாகும். யார் ஆரம்பித்திருந்தாலும், அதனை நாம் முடிவுறுத்துவோம். அதேபோன்று சகல பிரஜைகளினதும் உயிருக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். எனவே அதனைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுப்போம்-என்றார். (அ)

# கல்வி அதிகாரிகளைச் செயல்திறன் அடிப்படையில் கண்காணிக்க திட்டம்!

கொழும்பு, பெப். 21

ஒவ்வொரு கல்வி அதிகாரியையும் செயல்திறன் அடிப்படையில் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கான புதிய வழிமுறையை உருவாக்குவதில் விஞ்ஞானம், தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழுவில்,

இது குறித்த மூலோபாய திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார்.

கிராமங்களுக்கு தொழிநுட்பங்களை கொண்டு செல்வதை நோக்காக கொண்டு கல்வி அதிகாரிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (அ)

# பாதாள உலக குழுவினரின் விசாரணைகளை நீதிமன்றுக்கு அப்பால் முன்னெடுக்கத் திட்டம்

கொழும்பு, செப். 21

பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு அப்பால் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து நீதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று முன் தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் வினவிய போதே அவர் இதனை கூறினார்.

நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய நடைமுறைகளுக்கமைய பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியில்லை எனவும் உட்பிரவேசிக்கும் சட்டத்தரணிகள் சோதனைக்குட்படுத்தப்படமாட்டார்கள் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினர் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கான பாதுகாப்பு திட்டங்களை பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை,

நேற்று முன் தினம் நடந்த துப்பாக்கிச்சூட் டுச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத் தினால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ள அதே நேரம் கொழும்பு விளக்கம றியல் சிறைச்சாலையினால் ஆரம்ப கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# வரவு-செலவுத் திட்ட முன்மொழிவில் தாதியர்கள் சேவைக்கு பெரும் அநீதி

## அரச தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் தாதியர் சேவைக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளதாக அரச தாதியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பெப்ரவரி 17ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன் குறித்த வரவு-செலவு அறிக்கையில் தாதியர் சேவைக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை தாதியர் சேவைக்கு வழங்கப்படும் மேலதிக நேர வீதம் அதாவது ஒரு மணித்தியாலத்திற்கு வழங்கப்படும் தொகை மாதாந்த சம்பளத்தில் 1/160 இல் இருந்து 1/200 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தாதியர் பற்றாக்குறையால் 3 தாதியர்கள் செய்ய வேண்டிய பணியை ஒரு தாதியர் செய்து வரும் சூழ்நிலையில் 24 மணி நேரமும் தொடர் சேவையை வழங்கும் தாதியர் சேவையின் மேலதிக நேர கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், விடுமுறை நாளில் பணிபுரிந்ததற்காக வழங்கப்படும் தொகை மாதச் சம்பளத்தில் 1/20ல் இருந்து 1/30 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தாதியர் தொழில் என்பது 24 மணி நேரமும் கடமையைச் செய்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டிய ஒரு சேவையாகும். பிற அரச ஊழியர்கள் விடுமுறை எடுக்கும் பொது விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் தாதியர்கள் பணிபுரிகின்றனர். அந்த காரணத்திற்காக, செவிலியர்களுக்கு தற்போது அடிப்படை சம்பளத்தில் 1ஃ20 வழங்கப்படுகிறது, அது சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் 1ஃ30 ஆக குறைக்கப் பட்டுள்ளது, பொது விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பணி புரியும் ஒரு தாதியர் இழந்த தொகை சுமார் 6000 ரூபா ஆகும்.

அத்துடன் இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் தாதியர்களுக்கு நியாயமற்ற சம்பளத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.தற்போது முதல் அடுத்த 5 வருடங்களாக செய்படுவதுடன் வரவு -செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் 10 வருடங்கள் வரை நீடிக்கப் பட்டுள்ளது. மேலும், முதற் கட்ட நியமனத்தில் இருந்து 22 ஆண்டுகளில் இருந்து வழங் கப்பட்ட தரம் உயர்த்தப்பட்டு 31 ஆண் டுகளாக நீடிக்கப்பட்டுள்ளது-என குறிப்பிடப்பட்டுள்ளது.

# "இறையாண்மையை திருடிவிட்டது அரசு"!

கொழும்பு, பெப். 21

"தேர்தல் காலப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகள் வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அதிகாரத்துக்காக பொய்கூறி மக்களின் வாக்குகளையும் இறையாண்மை அதிகாரத்தையும் திருடி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிக பெரிய ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது" என விமல் வீர வன்ஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான செய்தியாளர் சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஒரு அரசாங்கம் முன்வைக்கும் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படை யிலேயே அந்த அரசாங்கத்தின் பயணப்பாதை உறுதிப்படுத்தப்படுகிறது. அதனடிப்படையில் கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் தேசிய மக்கள் சக்தியின் கன்னி பாதிடாகும்.

அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சமூக பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்கான ஒரு ஏற்பாடு கூட இடம்பெறவில்லை.

தவறான பொரு ளாதாரக் கொள்கை யிலிருந்து நாட்டை மீட்க புதிய பொரு ளாதாரக் கொள் கையை அறிமுகப்படுத்துவதாக கூறினார்கள். பழைய அரசாங் கங்களை விமர்சித்து விட்டு அந்த அரசாங்கங்கள் பின் பற் றிய அதே கொள் கையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வ தென்றால் அது எவ்வாறு புதிய பயணப் பாதையாக கருத முடியும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறையில் அடுத்த மாதம் உப்பு உற்பத்தி நிலையம் ஆரம்பம்!

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தகவல்

கொழும்பு, பெப். 21

**காங்கேசன்துறையில், அடுத்த மாதம் உப்பு உற்பத்தி நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**



பாராளுமன்றில் உரையாற்றிய அவர், எதிர்வரும் வருடத்தில் நாட்டில் நூற்றுக்கு 70 சதவீதமான உப்பு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் எனக் குறிப்பிட்டார்.

நாட்டில் இரண்டு உப்பு உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும் அதற்குத் தாம் உறுதியளிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது உப்பு தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளோம் அதனை நாம் நிவர்த்தி செய்யவேண்டும்.

இதற்காக உப்பு நிறுவனங்களை அமைக்கவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார். (அ)

# சந்தேக நபரை அடையாளம் காண மக்களிடம் உதவி கோரும் பொலிஸ்

கொழும்பு, பெப். 21

கனேமுல்ல சஞ்சீவ கொலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு உடந்தையாக இருந்த பெண் சந்தேகநபரை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

அதன்படி, சம்பந்தப்பட்ட பெண்ணைப் பற்றிய தகவல் தெரிந்தால் கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பணிப்பாளர், கொழும்பு குற்றவியல் பிரிவு- 071-8591727

பொறுப்பதிகாரி, கொழும்பு குற்றவியல் பிரிவு - 071-8591735 சந்தேகநபர் தொடர்பான தகவல்கள் பெயர் - சிங்புர தேவகே இஷாரா செவ்வந்தி வயது- 25 வயது தே.அ.அ.இல- 995892480ஏ

முகவரி - 243ஃ01, நீர்கொழுப்பு வீதி, ஜய மாவத்தை, கடுவெல்லேகம

இதேவேளை, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட கனேமுல்ல சஞ்சீவவின் சடலத்தை பெற்றுக்கொள்ள இதுவரை உறவினர்கள் எவரும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கனேமுல்ல சஞ்சீவ கொலை சந்தேகநபர் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைப்பு!

கொழும்பு, பெப். 21

திட்டமிடப்பட்ட குற்றக் குழு உறுப்பினர் கனேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவரை 72 மணித்தியாலங்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றில் அனுமதி கோரப்படவுள்ளதாகக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் - பாலாவி பகுதியில் நேற்று முன்தினம் மாலை கைதான குறித்த சந்தேகநபர் பல பெயர்களில் தம்மை அடையாளப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபர் பெண்ணொருவருடன் இணைந்து இந்த குற்றத்தைப் புரிந்துள்ளதுடன் பல அடையாள அட்டைகளும் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சட்டத்தரணிகளுக்கான அடையாள அட்டை ஒன்றும் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர் முதலில் தம்மை மொஹமட் அஸ்லம் ஷெரீப்டீன் என்ற பெயரில் அடையாளப்படுத்தியதுடன், பின்னர், சமிந்து டில்ஷான் பியுமங்க கந்தனஆராச்சி என்ற பெயரிலும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

அத்துடன், அவரிடம் காணப்பட்ட சட்டத்தரணி அடையாள அட்டையில் கொடிகாரகே கசுன் பிரபாத் நிசங்க என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மேலதிக விசாரணைகளுக்கமைய, அவரது உண்மையான அடையாளம்,

அவரின் முந்தைய குற்றங்கள் தொடர்பில் கண்டறிவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்துள்ளார். (அ)

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கடற்படைத் தளபதியுடன் பேச்சு!



கொழும்பு, பெப். 21

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் கடற்படைத் தளபதிற்கும் இடையில் நேற்று முன் தினம் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பானது கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.இந்த உத்தியோகபூர்வ சந் திப்பில், இலங்கைக்கான அமெ ரிக்கத் தூதுவர், 26 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மி ரல் காஞ்சனா பனாகொடவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து சிநேகபூர்வ கலந்துரையாடல் நடைபெற்றது. (அ)

# பாதாள குழுக்களை ஒடுக்க நடவடிக்கை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி

கொழும்பு, பெப். 21

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்குரிய நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிரணி எம்.பிக்கள் வெளியிட்ட கருத்துகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு எதிராக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுவருகின்றன.

எனினும், கறுப்புப் பணம், போதைப்பொருள் விநியோகம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுடனும் பாதாளக் குழுக்கள் தொடர்புபட்டுள்ளன. இவற்றை இயக்குபவர்களுள் சிலர் எமது நாட்டில்கூட இல்லை.

விசாரணைகளை முன்னெடுத்து செல்கையில் சில இடங்களில் சில பாதுகாப்புத் தரப்பினர் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.குறிப்பாக விசேட அதிடிரப்படை, பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதனால்தான் அரசாங்கம் வழங்கியுள்ள துப்பாக்கிகளை மீள கையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா, டுபாயில் இருந்த குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்துவந்து விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இப்படி பல நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் அவை அனைத்தையும் முன்கூட்டியே வெளிப்படுத்த முடியாது.

எது எப்படி இருந்தாலும் இப்பிரச்னை தொடர்பில் அரசாங்கம் உரிய தலையீடுகளை மேற்கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்-என்றார். (அ)

# ஊடகங்களுக்கு கருத்துச் சொல்ல அரசு எனக்கு தடை போடவில்லை!

## நிலந்தி கொட்டஹச்சி எம்.பி

கொழும்பு, பெப். 21

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என தம்மை அரசாங்கம் பணித்துள்ளதாக வெளியாகி யுள்ள செய்திகளை நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி மறுத்துள்ளார்.

இந்த செய்திகள் முற்றிலும் பொய்யானவை என நிலந்தி கொட்டஹச்சி கூறினார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்க்குமாறு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதற்கு விளக்கமளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை ஒரு சில ஊடகங்கள் பொறுப்புக்கூறலின்றி செய்திகளை வெளியிடுவதாகவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார். (அ)

# 31 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் கைது

கொழும்பு, பெப்.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 31 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மாத்தளை, நாவல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 01.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபரான பெண் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து 20,800 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 104 சிகரெட் காட்டுன்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல அரச நிறுவனங்களிலும் விசேட பிரிவு நிறுவ தீர்மானம்

கொழும்பு, பெப். 21

**பயனுள்ள பொது சேவைகளை உறுதி செய்வதற்காக அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளக அலுவல்கள் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான சுற்ற றிக்கை ஜனாதிபதியின் செயலா ளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்கவினால் வெளியிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஊழலைத் தடுப்பது, அர சாங்க நிறுவனங்களுக்குள் ஒருமைப்பாடு கலாச்சாரத்தை வளர்ப்பது, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு ணர்வை உறுதி செய்தல், நெறிமுறை நிர்வாகத்தை மேம்படுத்துதல், சட்ட அமலாக்கத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு களை விசாரிக்கும் ஆணையத் துடன் ஒத்துழைப்பது இந்த பிரிவை நிறுவுவதன் முதன்மை நோக்கமாகும்.

அனைத்து அரச நிறுவனங்க ளிலும் உள்ளக அலுவல்கள் பிரிவை விசேட பிரிவாக அமைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத் துள்ளார்.

முதற்கட்டமாக, அனைத்து அமைச்சுக்கள், மாகாண பிரதம செயலாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்க ளில் இது நிறுவப்படும்.

மேலும், இந்த உள்ளக அலு வல்கள் பிரிவுகளை ஸ்தாபிப் பது தொடர்பாக அமைச்சின் செயலாளர்கள்,

மாகாண பிர தம செயலா ளர்கள் மற்றும் மாவட்ட செய லாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்துமூலம் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# கல் ஓயாவில் புரண்டது ரயில் ஐந்து யானைகள் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 21

கல்ஓயா பகுதியில் யானை கள் கூட்டத்துடன் மீனகயா ரயில் மோதி ஏற்பட்ட விபத்தி னால் மட்டக்களப்பு மார்க்கத் தின் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் நேற்று அதிகாலை யானைக் கூட்டத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக இலங்கை ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் பரிதாபக ரமாக ஐந்து யானைகள் உயிரி ழந்துள்ளதாகவும் கூறப்பட் டது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மார்க்கத்தினூ டான ரயில் சேவை மட்டுப்ப டுத்தப்பட்டது.

அதன்படி, மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி இயக்கப்ப டவிருந்த புலத்திசை ரயில் சேவையையும் இரத்து செய்வதற்கு ரயில்வே திணைக் களம் நடவடிக்கை எடுத்தது.

மேலும், தடம் புரண்ட ரயிலை மீண்டும் தண்டவா ளத்தில் நிமிர்த்தி வைப்பதற் கான முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப் பட்டதாகவும் கூறப்பட்டது. (அ)

# சாரதியை கழுதை என அழைத்தார் அமைச்சர்!

கொழும்பு, பெப். 21

புதுக்கடை நீதிமன்ற வளா கத்துக்கு வந்த பொது பாது காப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதிஅமைச்சர் சுனில் வட்டகல, தனது வாகனத்தை வரவழைக்கும்போது தனது சாரதியை 'புருவா' (கழுதை) என்று அழைத்துள்ளார்.

பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பார் வையிட பிரதிஅமைச்சர் நேற்று முன் தினம் காலை நீதிமன்ற வளாகத்துக்கு சென்றார்.

இதன்போது, பல பத்திரிகையாளர்கள் அவரிடம் பொது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் திறன் குறித்து கேள்வி எழுப்பி னர். பதிலளிப்பதற்குப் பதி லாக, பிரதி அமைச்சர் தொலை பேசியில் சாரதியை அழைத்து, சத்தமாக, "புருவோ, வாரேன்" (கழுதை, இங்கே வா) என்று கூப்பிட்டார்.

அதே வீடியோவில், மற் றொரு நபர் பிரதி அமைச்சரின் வாகனத்தை உடனடியாகக் கண்டுபிடிக்குமாறு ஒருவருக்கு அறிவுறுத்துவது கேட்டது. (அ)

# சுகாதாரத்துறைசார் ஊழியர்களின் கொடுப்பனவு பட்ஜெட்டில் குறைப்பு

## நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதாரத் துறை ஊழியர்களின் கொடுப்பனவுகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளதாக நிறைவுகாண் மருத் துவ தொழில் வல்லுநர் ஒன்றி யம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு சுகாதார அமைச்ச ருக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படும் என அதன் செய லாளர் சானக தர்மவிக்ரம தெரி வித்தார்.

குறித்த கலந்துரையாடலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக் காவிட்டால் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை,

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எதிர் பார்த்த சம்பள அதி கரிப்பு இந்த வருட வரவு-செல வுத் திட்டத்தில் உள்ளடக் கப்படவில்லை என கல்வி வல் லுநர்கள் சங்கத்தின் தலைவர் வண. உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எதிர்பார்த்த சம்பள அதிகரிப்பு இந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வில்லை என கல்வி வல்லுநர் கள் சங்கத்தினரும் குற்றாட்சாட் டியுள்ளனர். (அ)

# ஒவ்வொரு நாளும் 3 முதல் 4 பேர் வாய் புற்றுநோயால் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 21

நாட்டில் ஒவ்வொரு நாளும் மூன்று முதல் நான்கு பேர் வாய் புற்றுநோயால் உயிரிழப்பதாக வாய்வழி மற்றும் மாக்ஸில்லோ பேஷியல் நிபுணர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித் தார்.

இந்த நாட்டில் ஆண்டு தோறும் 2,000 முதல் 3,000 வரை புதிய வாய் புற்றுநோய் கள் கண்டறியப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விசேட வைத்திய நிபு ணர் ஆனந்த ரத்நாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இதற்கிடையில், பாடசாலை மாணவர்களிடையே வாய் புற் றுநோய்க்கான முந்தைய அறிகு றிகள் காணப்படுவதாக வும் நிபுணர் வைத்தியர் ஆனந்த ரத் நாயக்க மேலும் கூறினார். (அ)

# சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ரஜீவ் அமரசூரிய

கொழும்பு, பெப். 21

2025-2026 ஆம் ஆண்டிற் கான இலங்கை சட்டத்தர ணிகள் சங்கத்தின் 29ஆவது தலைவராகச் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். அவர் தனது போட்டியாளர் வேட்பாளர் சட்டத்தரணி சுனில் அபேரத் னவை விடப் பெரும்பான்மை யைப் பெற்றுள்ளார்.

உத்தியோகப்பூர்வ முடிவு களின்படி, ரஜீவ் அமரசூரிய 4,497 வாக்குகளைப் பெற்றார்.

அவருக்கு எதிராகப் போட் டியிட்ட வேட்பாளர் சுனில் அபேரத்ன 1,667 வாக்குகளைப் பெற்றார்.

ரஜீவ் அமரசூரிய 2,830 வாக்குகள் பெரும்பான்மை யுடன் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். (அ)

# இலங்கைக் குழந்தைகளின் ஆபாச வீடியோக்கள் பரவல்

கொழும்பு, பெப். 21

இலங்கை குழந்தைகளின் ஆபாச வீடியோக்கள் உலகள வில் பரவியுள்ளதாக அமெரிக்க அரசு அமைப்பு அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நாட்டில் குழந்தைகளின் ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் ஆன்லைனில் பதிவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில், அமெரிக்க அர சாங்க நிறுவனம் ஒன்று பல முறைப்பாடுகளை தாக்கல் செய்துள்ளது.

இந்த அதிர்ச்சித் தகவலை குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகம் நேற்று முன் தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதி மன்றத்தில் வெளியிட்டது.

அமெரிக்க அரசு அமைப்பின் முறைப்பாடுகளின் அடிப்படை யில், இந்நாட்டில் இருந்து சிறுவர்கள் தொடர்பான ஆபாசக் காணொளிகள் உலக ளவில் பரவி வருகின்றன என்பது அம்பலமாகியுள்ளது. இந்தக் குற்றச்செயல்களைக் கட்டுப்ப டுத்தும் நோக்கில், குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிர யோக தடுப்புப் பணியகம் இந்த விவகாரத்தில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் கேவலமான சம்ப வம் தொடர்பாக, பெண் தலைமை ஆய்வாளர் சமந்தா நேற்று முன் தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் முறைப்பாடு தாக்கல் செய்தார். (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்புடன் மேலதிகநேர கொடுப்பனவும் உயர்த்தப்படும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 21

அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளத் திற்கு இணங்க மேலதிக நேர கொடுப்பனவும் அதிகரிக்கப்ப டும் என சுகாதார மற்றும் ஊட கத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் எதிர்க்கட்சி உறுப் பினர் காவிந்த ஜயவர்தன எழுப் பிய கேள்வி ஒன்றுக்குப் பதில ளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது மேலும் தெரிவிக்கை யில்-நாட்டின் சுகாதாரத் துறையில் மருத்துவர்கள் முதல் சுகாதார உதவியாளர்கள் வரை அவர்களின் சேவை பாராட்டப் பட்டு மதிக்கப்படுகின்றது. அந்த வகையில் அவர்களுக்கு மேலதிக நேரமாக 120 மணித் தியாலங்களுக்கு மேல் பணி புரிய நேர்கிறது.

அதனை கருத்திற் கொண்டே மருத்துவர்கள் முதல் அரசாங்க ஊழியர்கள் அனைவரினதும் அடிப்படை சம்பளத்தை அதிக ரிப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அது தொடர் பில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளத் துக்கு இணங்க மேலதிக நேரக் கொடுப்பனவும் அதிகரிக்கப்ப டும்.

அந்த வகையில் அரசாங்க ஊழியர்களின் மார்ச் மாத சம்பளத்தை விட ஏப்ரல் மாதம் அதிகரித்த சம்பளத்தை அவர் கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வரவு-செலவுத் திட் டம் தொடர்பில் சிறு சிறு குழுக்கள் குழப்பம் அடைந்தி ருந்தாலும் அதற்கு அகப்பட வேண்டிய அவசியம் கிடை யாது. அந்த வகையில் அதிக ரிக்கப்பட்ட சம்பள உயர்வு கட்டம் கட்டமாக வழங்கப் படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சட்டவிரோத மதுபானத்தால் குடும்ப பிரச்னை அதிகரிப்பு

## இராணுவத்திடம் முறையிட்ட மக்கள்



கல்முனை, பெப்.21

**சட்டவிரோத மதுபான விற்பனையால் பல சமூக மற்றும் குடும்பப் பிரச்னைகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் இராணுவத்தினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை கணபதிபுரம் கிராமத்தை சேர்ந்த மக்கள், நேற்று முன்தினம் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு இராணுவத்தினரின் உதவியை நாடினர். இதன்போது, சட்டவிரோத மதுபானத்தால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் குடும்பப் பிரச்னைகள், மோதல்கள் காரணமாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் கவலை வெளியிட்டனர்.

இது தொடர்பில் பலமுறை முறைப்பாடு செய்தும் சம்மாந்துறை பொலிஸார் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறினர்.

மல்வத்தை பகுதியி லுள்ள இராணுவத்தின் 24ஆவது காலாட்படை பிரிவு தலைமையகத்துக்குச் சென்று இராணுவத்தினரிடம் மக்கள் தங்கள் பிரச்னைகளை தெரிவித்தனர். இது குறித்து உரிய தரப்பினரிடம் தெரிவிக்க நடவ டிக்கை எடுப்பதாக இராணுவத்தினர் கூறினர். (எ)

# இஸ்லாமாபாத் வித்தியாலயத்தில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்



கல்முனை, பெப்.21

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூக ரீதியான, சுற்றாடல் ரீதியான மற்றும் ஒழுக்க விழுமிய ரீதியிலான கிளீன் சிறீலங்கா எனும் வேலைத் திட்டம் கடந்த 18 ஆம் திகதி அதிபர் ஏ. ஜி. முகமது ரிஷாத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, செயல்களை "முன்னெடுப்போம் பொறுப்புடன் செயல்படுவோம் - சூழல்நேய பாடசாலையிலிருந்து எதிர்கால பசுமைத் தலைவர்களை உருவாக்குவோம், பல்வகைமையை மதிக்கின்ற மகிழ்ச்சிக்குரிய வகுப்பறை, செயல்களில் நியாயத்தன்மை மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திலும் வெளிப்படைத் தன்மை மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருள்களுக்கேற்ப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இணைந்து சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர். (எ)

# ஆசிரியர்கள் கௌரவிப்பு



ஒலுவில், பெப்.21

தென்கிழக்கு பல்கலைக் கழகமும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து நடத்திய பல்கலைக் கழக ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள வகுப்பின் இறுதி நாள் நிகழ்வும் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் முனாஸ் முகைடீன் தலைமையில் ஊழியர் மேம்பாட்டு நிலைய கேட்போர் கூடத்தில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊழியர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எச். எம். நிஜாம் கலந்து கொண்டார். (எ)

# மருத்துவமனை வளங்களை பகிர்வது குறித்து ஆராய்வு

கல்முனை, பெப்.21

கல்முனை பிராந்தியத்தில் உள்ள மத்திய அரசின் ஆதார மருத்துவமனைகளின் வளங்களை மாகாண ஆதார மருத்துவமனைகளுக்கு பகிர்ந்து பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதற்குரிய விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள், அத்தியட்சகர் களுடன் கலந்துரையாடலொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையின் பணிப்பாளர் ஜீ. சுகுணன், அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் ஐ. எம். ஜவாஹிர், அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையின் அத்தியட்சகர் ஏ. எல். எம்.ரகுமான், சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோயில், பொத்துவில் ஆதார மருத்துவமனைகளின் அத்தியட்சகர்களும் கலந்து கொண்டனர்.



பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கும் போது சுகாதார நிறுவனங்கள் வளங்களை பகிர்ந்து கொள்வதில் எதிர்நோக்குகின்ற சவால்கள், சுகாதார சேவைகளை மேம்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கல்முனை பிராந்தியத்தில் மத்திய அரசின் கீழுள்ள 4 ஆதார மருத்துவமனைகளும், மாகாண அமைச்சின் 3 ஆதார மருத்துவமனைகளும், 14 பிர தேச மருத்துவமனைகள், 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் 8 ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் ஊடாகவும் பொது மக்களுக்கு சேவை வழங்கப் பட்டு வருகின்றன.

# காரைதீவு மற்றும் நிந்தவூரிலுள்ள உணவகங்களில் திடீர் சோதனை

## நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

கல்முனை, பெப்.21

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்களை சோதனைக்குட்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் காரைதீவு, நிந்தவூர் மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன நேற்று திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ. எஸ். எம். பௌசாத் தலைமையில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம். முனவ்வர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம். இஸ்ஸதீன், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ. எல். எம். லாபீர், உணவு, மருந்துகள் பரிசோதகர் எஸ். ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

# தொற்றா நோய் தொடர்பில் விசேட பயிற்சி செயலமர்வு

கல்முனை, பெப்.21



தொற்றா நோய்களைத் தடுக்கும் நோக்கில் ஆரோக்கி யமான உணவு முறை தொடர்பில் தாதியர்களை தெளிவூட் டும் பயிற்சி செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையில் நேற்று நடைபெற்றது. கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலை மையில் இந்தப் பயிற்சி செயலமர்வு நடைபெற்றது.

இதில், பிராந்திய பணிப்பாளர் மற்றும் பிராந்திய தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி இர்ஷாத் ஆகியோர் விளக்கமளித்தனர். கல்முனை பிராந்தியத்தில் உள்ள சகல மருத்துவமனைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தாதியர்கள் இப் பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் போரில் 200 பேர் படுகொலை

## சூடானில் தொடரும் பெரும் சோகம்

கார்டூம், பெப்.21

**சூடானில் மூன்று நாட்களாக நீடித்த உள்நாட்டுப் போரில் சுமார் 200 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.**

கடந்த 2023ஆம் ஆண்டு முதல் சூடானில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அங்கு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில், அதற்கு எதிராக துணை இராணுவம் தீவிரமாக போரிட்டு வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொது மக்கள், இராணுவத்தினர் உட்பட 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் சூடானின் தெற்கு பகுதியின் அல் - கடாரிஸ், அல் - கெல்லவட் கிராமத்தில் துணை இராணு வத்தினர் பதுங்கியிருந்து செயல்படுவதாக அந்த நாட்டின் இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது. இதன் பேரில் இராணுவத்தினர் அங்கு களமி றக்கப்பட்டனர். தொடர்ந்து ரொக்கெட் குண்டுகளை வீசியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் பயங்கரத் தாக்குதல் நடத்தப்பட்டது. கடந்த 18 ஆம் திகதி முதல் நேற்று வரை மூன்று நாட்களாக நீடித்த இந்தத் தாக்குதலில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.(எ)

# நுளம்பு பிடித்து கொடுத்தால் பிலிப்பைன்ஸில் சன்மானம்!

மணிலா, பெப்.21

பிலிப்பைன்ஸில் நுளம்பை உயிருடனோ அல்லது கொன்றோ தந்தால் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மணிலாவில் பரவிவரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த உள்ளூர் நிர்வாகம் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது. நுளம்பை உயிருடனோ, கொன்றோ கொண்டுவந்து தந்தால் 5 நுளம்புக்கு இலங்கை பெறுமதியில் 5. 13 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பால் பொது மக்கள் அதிகம் பணம் ஈட்டுவதற்காக வேண்டுமென்றே தண்ணீரைத் தேங்கவைத்து நுளம்புகளை உற்பத்தி செய்யும் அபாயமும் ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பிலிப்பைன்ஸில் இந்த ஆண்டில் மட்டும் 28, 234 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 40 சதவீதம் அதிகமாகும். (எ)

# தவறாக வழிநடத்தப்படுகிறார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

## உக்ரைன் ஜனாதிபதி சாடல்

கீவ், பெப்.21



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நேரில் சந்தித்துப் பேச தான் விரும்புவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். இதேவேளை, ரஷ்யாவால் ட்ரம்ப் தவறாக வழிநடத்தப்படுகிறார் என்றும் சாடியுள்ளார்.

போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் அமெரிக்கா - ரஷ்யா இடையே சவுதி அரேபியாவில் கடந்த 18 ஆம் திகதி பேச்சுக்கள் நடந்தன. இந்த பேச்சுக்களில் உக்ரை னுக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. இது குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அதிருப்தி வெளியிட்டுள்ளார். இத னால், கோபமடைந்த ட்ரம்ப், போர் தொடங்க உக்ரைன்தான் காரணம் என்றும், உக்ரைன் ஜனாதிபதி முன்பே இந்தப் போரை நிறுத்தியிருக்க வேண்டும்என்றும்கடுமையாக சாடினார்.

இந்த நிலையில் உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஜெலன்ஸ்கி கூறுகையில், "போருக்கு உக்ரைன்தான் காரணம் என்று ட்ரம்ப் தவறாக கூறுகிறார். இந்த விவகாரத்தில் அவர் ரஷ்யாவால் தவறாக வழிநடத்தப்படுகிறார்"- என்றார். (எ)

# பஸ்ஸை மறித்து துப்பாக்கிச் சூடு 7 பேர் உயிரிழப்பு

லாகூர், பெப்.21


பாகிஸ்தானில் பஸ் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணம் குவாட்டா நகரிலிருந்து நேற்று முன்தினம் மாலை பஞ்சாப் மாகாணத்துக்கு பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது.

பலுசிஸ்தானின் பர்ஹன் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கிய கும்பல் பஸ்ஸை இடைமறித்தது. பஸ்ஸில் இருந்த பயணிகளை கீழே இறக்கிய அந்த கும்பல் அடையாள அட்டைகளை சோதித்தது. அதில், 7 பயணிகள் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் என தெரிந்ததும் அவர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது.(எ)

# பலஸ்தீனர்களை யாரும் வெளியேற்ற முடியாது!

## ஐக்கிய அரபு அமீரகம் உறுதி



அபுதாபி, பெப்.21

பலஸ்தீன மக்களை காஸாவில் இருந்து வெளியேற்றும் முயற்சியை நிராகரிப்பதாக ஐக்கிய அமீரக ஜனாதிபதி ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்க்கோ ரூபியோ மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் அபுதாபி தேசிய கண்காட்சி மையத்தில் ஐக்கிய அமீரக ஜனாதிபதியை சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பில் மத்திய கிழக்கு மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், காஸாவில் உள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கான முயற்சிகள், பிரதேச அளவிலான அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்த விவகாரங்கள் பற்றிப் பேசப்பட்டன.

அப்போது, அமீரக ஜனாதிபதி கூறுகையில், "இரு நாட்டு தீர்வை அடிப்படையாகக் கொண்டு நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும் ஒரு பாதையுடன் இணைப்பதன் மூலம் காஸாவின் மறுகட்டமைப்பை பிரதேச அளவில் உறுதி செய்வது முக்கியம். பிரதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மோதல் விரிவடைவதை தடுக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று, அமைதிக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் பலஸ்தீன மக்களை வெளியேற்றும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் எந்த வொரு முயற்சியையும் அமீரகம் நிராகரிக்கிறது. இதில் அமீரகம் உறுதியாகவுள்ளது என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்"- என்றார். (எ)

# "விண்வெளியில் சுனிதா வில்லியம்ஸ் சிக்கியதன் பின்னணியில் அரசியல்"

நியூயோர்க், பெப்.21

அரசியல் காரணமாக சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் எட்டு மாதங்களாக சிக்கியுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவுநர் எலான் மஸ்க் தெரிவித்தார். தனியார் ஊடக நிறுவன நேர்காணலில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் மஸ்க் பங்கேற்றபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

"அரசியல் காரணங்களால் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் என இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அவர்களை பூமிக்கு அழைத்து வரும் பணியை ஸ்பேஸ் எக்ஸ் துரிதமாக மேற்கொண்டது. இருந்தாலும், அது பல்வேறு காரணங்களால் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது. அவர்களை பூமிக்கு அழைத்து வருவதில் நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக உள்ளோம்.

இதற்கு முன்பு எங்களது நிறுவனம் விண்வெளி மையத்தில் இருந்து விண்வெளி வீரர்களை பூமிக்கு பத்திரமாக அழைத்து வந்துள் ளது"- என்றார். (எ)

# உலகின் மிகப்பெரிய உந்துசக்தி கலவை இயந்திரம் உருவாக்கம்!

புதுடில்லி, பெப்.21

விண்வெளித்துறையில் தற்சார்பு நிலையை அடையும் வகையில், 10 தொன் நிறையில் உலகின் மிகப் பெரிய செங்குத்து உந்துசக்தி கலவை இயந்திரத்தை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

விண்வெளித்துறையில் இஸ்ரோ தற்சார்பு நிலையை அடைந்து வருகிறது. தற்போது கிரையோஜெனிக் இயந்திரம் உள்நாட்டில் தயாராகி வருகிறது. இந்த நிலையில், 10 தொன் நிறையில் உலகின் மிகப் பெரிய உந்துசக்தி கலவை இயந்திரத்தை இஸ்ரோ வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. இந்த புதிய சாதனம் பெங்களூருவில் உள்ள மத்திய தயாரிப்பு தொழில் நுட்ப மையம் ஆகியவற்றுடன்இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரொக்கெட்டில் திட எரிபொருள் உந்துசக்தி முக்கிய பங்காற்றுகிறது.

இது குறித்து இஸ்ரோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ரொக்கெட் மோட்டார்களில் திட உந்துவிசை மிக முக்கியமானது. இவற்றின் உற்பத்திக்கு அதிக உணர்திறன் மற்றும் அபாயகரமான பொருட்களின் துல்லியமான கலவை இயந்திரம் தேவைப்படுகிறது.

தற்போது, உருவாக்கப்பட்டுள்ள 10 தொன் நிறையுள்ள செங்குத்து கலவை இயந்திரம் உலகிலேயே மிகப் பெரியது. இந்த இயந்திரத்தை முறைப்படி ஒப்படைக்கும் நிகழ்ச்சி பெங்களூரில் உள்ள சி.எம்.டி.ஐ. மையத்தில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது. (எ)

# டில்லி முதல்வராக ரேகா குப்தா தெரிவு



புதுடில்லி, பெப்.21

இந்தியாவின் டில்லி சட்டப்பேரவைக்கு கடந்த 5ஆம் திகதி தேர்தல் நடந்தது. 70 தொகுதிகளில் பா. ஜ. க. 48 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளது. இந்த நிலையில், நேற்று முன்தினம் டில்லி முதல்வரை தெரிவு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி வீட்டில் நடைபெற்றது.

இதன்போது, முதல்வர் பதவிக்கு ரேகா குப்தா ஒருமனதாக தெரிவு செய்யப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அசத்தல் வெற்றி

கராச்சி, பெப்.21

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது. இதில், இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடக்கின்றன. மற்ற ஆட்டங்கள் பாகிஸ்தானின் கராச்சி, ராவல்பிண்டி, லாகூர் ஆகிய நகரங்களில் நடைபெறுகின்றன.

இந்த நிலையில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தானும் நியூசிலாந்தும் பலப்பரீட்சை நடத்தின. இதில், முதலில்

துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 320 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ரொம் லேதம் 118 ஓட்டங்களும், வில் யங் 107 ஓட்டங்களும் அடித்தனர். பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவுப், நசீம் ஷா தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பின்னர் கடின இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி 47. 2 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால், நியூசிலாந்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக குஷ்தில் ஷா 69 ஓட்டங்கள் அடித்தார். நியூசிலாந்து சார்பில்



வில்லியம் ஓ ரூர்கே, மிட்செல் சாண்ட்னர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். லேதம் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இந்த ஆட்டத்தையும் சேர்த்து சம்பியன்ஸ் கிண்ண வரலாற்றில் இவ்விரு அணிகளும் 4 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளன. அந்த நான்கு போட்டிகளிலும் நியூசிலாந்து அணியே வெற்றி பெற்றுள்ளது. (எ)

# ஐ. சி. சி. தரவரிசை தீக்ஷனா முதலிடம்

டுபாய், பெப்.21


ஐ. சி. சி. ஒருநாள் போட்டி தரவரிசையில் இலங்கை வீரர் தீக்ஷனா முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து, இலங்கை - அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா - நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டி (50 ஓவர்) தொடர்கள் நிறைவடைந்துள்ளன. இதில், வீரர்களின் செயல்பாடுகளை கணக்கில் கொண்டு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) ஒருநாள் போட்டிகளுக்கான புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.


இதில், பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இலங்கை வீரர் தீக்ஷனா முதலிடத்துக்கு முன்னேறி அசத்தியுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயல்பட்டதால் தீக்ஷனா ஏற்றம் கண்டுள்ளார். இதுவரை முதலிடத்தில் இருந்த ஆப்கானித்தான் வீரர் ரஷித் கான் 2ஆவது இடத்துக்கு சரிந்துள்ளார். நமீபியா வீரர் பெர்னார்ட் ஸ்கோல்ட்ஸ் 3ஆவது இடத்தில் தொடருகிறார்.

இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் ஒரு இடம் உயர்ந்து 4ஆவது இடத்திலும், முகமது சிராஜ் 10ஆவது இடத்திலும் உள்ளனர். பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் ஷா அப்ரிடி ஒரு இடம் சரிந்து 5ஆவது இடத்துக்கு வந்துள்ளார். நியூசிலாந்தின் சாண்ட்னர் 5 இடங்கள் முன்னேறி 7ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளுக்கான சகலதுறை வீரர்கள் தரவரிசையில் பெரிய அளவில் மாற்றமில்லை. ஆப்கானித்தான் வீரர் முகமது நபி முதலிடத்தில் தொடருகிறார். (எ)




# காலிறுதியில் அல்காரஸ்



டோஹா, பெப்.21

கட்டார் ஓபன் ரென்னிஸ் தொடரில் அல்காரஸ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள இந்தத் தொடர் டோஹாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ், இத்தாலியின் லூகா நார்டியுடன் மோதினார்.

இதில் முதல் 2 செட்களை ஆளுக்கு ஒன்றாக கைப்பற்றிய நிலையில், 3ஆவது செட்டை அல்காரஸ் கைப்பற்றி வெற்றி பெற்றார். அல்காரஸ் இந்த ஆட்டத்தில் 6 - 1, 4 - 6 மற்றும் 6 - 3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். (எ)

# "வெற்றி பெற்ற விதம் மகிழ்ச்சியளிக்கிறது"

கராச்சி, பெப்.21


பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நாங்கள் வெற்றி பெற்ற விதம் மகிழ்ச்சியளிக்கிறது என்று நியூசிலாந்து அணியின் தலைவர் மிட்செல் சாண்ட்னர் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி குறித்து சாண்ட்னர் கூறுகையில், "நாங்கள் வெற்றி பெற்ற விதம் மகிழ்ச்சியளிக்கிறது. பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக பந்து வீசினர். ஆனால், ரொம் லேதம் மற்றும் வில் யங் இருவரும் அமைத்த இணைப்பாட்டம் மிகச்சிறந்த ஒன்றாக அமைந்துவிட்டது. சரியான நேரங்களில் அவர்கள் பௌண்ட்ரி அடித்தனர். கடைசி நேரத்தில் களமிறங்கிய பிலிப்ஸ் அதிரடியாக விளையாடினார். நாங்கள் 260 ஓட்டங்களை சுற்றி இலக்கு நிர்ணயிப்போம் என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால், கடைசி ஓவர்களில் நாங்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிக ஓட்டங்கள் வந்தன. அவ்வளவு பெரிய இலக்கை நிர்ணயித்த பின்னர், முதல் 10 ஓவர்கள் பந்துவீச்சு எங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

ரிஸ்வான் அடித்த பந்தை பிலிப்ஸ் பிடித்தது அற்புதமாக அமைந்தது. ஏனென்றால் ரிஸ்வானின் விக்கெட் மிகவும் முக்கியம். முத்தரப்பு தொடரில் ஆடியது பாகிஸ்தான் அணியையும், இங்குள்ள மைதானத்தின் சூழலையும் நன்றாக புரிந்து கொள்ள உதவியது"- என்றார். (எ)

# வரலாறு படைத்த பாகிஸ்தான் வீரர்



கராச்சி, பெப்.21

69 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் பாகிஸ்தான் வீரர் ஒருவர் வரலாறு படைத்துள்ளார்.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் தொடங்கியது.

இதில், நேற்று முன்தினம் கராச்சியில் நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தானும், நியூசிலாந்தும் பலப்பரீட்சை நடத்தின.

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தரப்பில் குஷ்தில் தா 69 ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் 7 அல்லது அதற்கும் கீழ் வரிசையில் களமிறங்கி 50 ஓட்டங்களுக்கு மேல் அடித்த முதல் பாகிஸ்தான் வீரர் என்ற வரலாற்றை அவர் படைத்துள்ளார். இதற்கு முன்னர் அப்துல் ரசாக் 48 ஓட்டங்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது.(எ)


# நாங்கள் இரு இடங்களில் ஆட்டத்தை தவறவிட்டோம்

## பாக். அணி தலைவர் ரிஸ்வான்

கராச்சி, பெப்.21

சம்பியன்ஸ் கிண்ண தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக பாகிஸ்தான் தோல்வியை தழுவியது. இது குறித்து அந்த அணியின் தலைவர் முகமது ரிஸ்வான் கூறுகையில், "நியூசிலாந்து அணியினர் ஒரு நல்ல இலக்கை எட்டினர். நாங்கள் அதை எதிர்பார்க்கவில்லை. நாங்களும் அந்த இலக்கை அடைய 260 ஓட்டங்கள் வரை நெருங்கினோம். நாங்களும் எங்களால் முடிந்தவரை முயற்சி செய்து அனைத்து தந்திரங்களையும் பயன்படுத்தினோம், ஆனால், அவர்கள் நன்றாக விளையாடினர். மைதான நிலைமைகளைப் பார்க்கிறோம். அது முன்பு போல் துடுப்பாட்டம் செய்ய எளிதாக இல்லை. ஆனால், வில் யங் மற்றும் லேதம் இணைந்து போட்டியை மாற்றி விட்டனர்.

துடுப்பாட்டத்தில் எங்களுக்கு நல்ல தொடக்கம் கிடைக்கவில்லை. பக்கர் ஜமானுக்கு ஏற்பட்ட காயம் குறித்து இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. அவர் கொஞ்சம் வலியில் இருக்கிறார். நாங்கள் இரண்டு



இடங்களில் ஆட்டத்தை இழந்தோம். ஒரு முறை கடைசி ஓவர்களில் பந்துவீசும் போது, பின்னர் பவர் பிளேயில் துடுப்பாட்டம் செய்யும் போது. இந்தத் தோல்வி எங்களுக்கு ஏமாற்றமளிக்கிறது. நாங்கள் இதை ஒரு சாதாரண போட்டியைப் போல விளையாடி விட்டோம். இப்போது, போட்டி முடிந்துவிட்டது, மீதமுள்ளவற்றில் சிறப்பாக செயல்பட முடியும் என்று நம்புகிறேன்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

மூலம் மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாசைகள் தொடர்பில் புதிய விதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கோவிட் பெருந்தொற்றும் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியும் பல தசாப்தங்களாக இலங்கையர்கள் எதிர்பார்த்த மாற்றங்களுக்கான தேவைகளை வெளிப்படுத்தியுள்ளன.

உலகின் வேறு எந்த நாட்டையும் போல இலங்கையும் தனித்து செயல்பட முடியாது. உலகளாவிய இணைப்பும் ஒன்றையொன்று சார்ந்திருந்தல் ஆகியன இந்த பூகோளமயமாக்கல் யுகத்திலும் கூட ஒரு விதிமுறையாக உள்ளது. வெளிநாட்டு சந்தையாக இருந்தாலும்சரி அல்லது முக்கிய இறக்குமதிகள் சுற்றுலா துறையாக இருந்தாலும் சரி முதலீடு மற்றும் தொழில்நுட்பமாக இருந்தாலும் சரி இலங்கை ஏனைய நாடுகளுடன் ஈடுபாட்டை பேணுவது அவசியம். இதற்கு உலகின் போக்குகளை சரியாக புரிந்து கொள்ளும் திறன் அவசியம் - என்றார்.

## வடக்கு...

இதனாலேயே மறுநாளான வியாழக்கிழமை அனைத்துப் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாதாள...

அமைச்சுசார் ஆலோசனை குழுவின் முதலாவது கூட்டம் அவரின் தலைமையில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வ நிறுவனங்களில் சில நபர்கள் வரையில் பாதாள உலகத்தின் செயல்பாடுகள் விரிவடைந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## இனவாதம்...

எவருக்கும் இடமளிக்கப்படமாட் டாது" - என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடந்த 10ஆவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனை குழுவின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சில வழிபாட்டு ஸ்தலங்களை (விகாரைகள்) அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும். வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர். இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது - என்றார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களுடன் கூடிய காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதற்கு பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,

வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனையில் உள்ள காணிகள் தொடர்பில் மீண்டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணிகளை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (ஐ)

## அரியாலை...

பலர் உடனிருந்தனர்.

இந்த பகுதியில் 2011ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இராணுவ முகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியும் அருகிலேயே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாணவர்...

நேற்றைய கலந்துரையாடலில்,

பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் பெற்றோர் உட்பட எவரும் மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவிக்காது ஏற்றிச் செல்கின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக மருத்துவர்களால் இந்த விடயம் அதிகளவில் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. தலைக்கவசம் அணியாது பயணிப்பதால் விபத்துகளில் மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, சட்டம் ஒழுங்கைப் பேணும் வகையில் தலைக்கவசம் அணியாது பயணிக்கும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். மாணவர்களை அவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியம் - என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அதனை இறுக்கமாகப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆளுநருக்கு தெரிவித்தார். (ஐ)

## சுவிஸ் குமார்...

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம். எம். மிஹால் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறீகஜன் ஆகியோருக்கு எதி ாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சுவிஸ்குமார் என்பவரை சட்டமுறையற்ற வகையில் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்க உதவியதன் மூலம் தண்டனைச் சட்டக் கோவை 209ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்தமை மற்றும் அதற்கு ஒத்துழைத்ததன் மூலம் 109ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 209 ஆம் பிரிவின் கீழான குற்றம் ஒன்றைப் புரிந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவருக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிச் சேவை ஆணைக் குழுவின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. வழக்கின் இரண்டாவது எதிரியான முன்னார் உப பொலிஸ் பரிசோதகர் சிறீகஜன் வெளிநாடு தப்பிச் சென்றமை யால் அவரின்றியே அவருக்கு எதிரான விசாரணைகள் நடைபெற்றன.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார்.

எதிரிகளான லலித் ஏ ஜெயசிங்க, சிறீகஜன் மீதான இரண்டு குற்றச்சாட்டுகளும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநர் நிரூபிந்த மையால் இருவரையும் குற்றவாளிகளாக மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இருவருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அத்துடன், தப்பிச் சென்ற சிறீகஜனுக்கு பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# பாணின் விலையை குறைக்காவிடின் முறையிடலாம்!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாணின் விலையை 10 ரூபாய் குறைக்காமல் - 140 ரூபாய்கு விற்பனை செய்யும் வெதுப்பகங்களுக்கு எதிராக பொதுமக்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்யலாம் என்று யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்க செயலாளர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பாணின் விலையை 10 ரூபாய் குறைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. எனினும், பல வெதுப்பகங்கள் பாணின் விலையை குறைக்கவில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆகவே, பாணின் விலையை குறைக்காத வெதுப்பகங்களுக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்க முடியும் - என்றார். (ஐ-05)

## அரசு...

வரவேற்கத்தக்க விடயம் என்றும் கூறியுள்ளார்.

அரியாலை புதைகுழி விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு,

குறித்த மயானத்தில் மனித எச்சங்கள் வெளிவந்தமை தொடர்பில் அறிய கிடைத்ததும் நாங்கள் சென்று பார்வையிட்டோம். அங்கு காணப்பட்ட எச்சங்களை பார்க்கும்போது எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்ட எச்சங்களாக பாகங்கள் கலக்கப்பட்டவையாக காட்சியளித்தன. இந்நிலையில் யாழ்ப்பாண நீதிமன்றம் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி இருப்பது நம்பிக்கை தரும் நிலையில், தேவை ஏற்படின் சர்வதேச தரத்திலான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் யுத்தகால உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை கோர மாட்டோம் உள்ளக விசாரணைகளே நடைபெறும் எனக் கூறி வரும் நிலையில் குறித்த புதைகுழி யுத்த காலத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனித எச்சங்களாக இருக்கலாம் என நாம் சந்ததிக்கிறோம்.

ஆகவே, தற்போதைய அரசாங்கத்திடம் நாங்கள் கோரிக்கை ஒன்றை முன் வைக்கிறோம். குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ-05)

## காணாமலா...

நிறைவடைந்ததைத் தொடர்ந்தே இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பித்த தீச்சட்டி ஏந்திய கவனவீர்ப்பு போராட்டம் ஏ-9 வீதி வழியே நகர்ந்து டிப்போ சந்தியில் நிறைவடைந்தது. இதன்போது, போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தமக்கான நீதி கோரல்களை கோஷங்களாக எழுப்பினர்.

போராட்டத்தின் இறுதியில் வாசிக்கப்பட்ட பிரகடனத்தில், "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்கள் கடந்த நிலையில் எம்மால் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எமது பிள்ளைகளை இதுவரையில் ஒருமுறையாவது பார்க்கமாட்டோமா என எண்ணி காத்திருந்து 8 வருடங்கள் நிறைவடைந்து ஒன்பதாவது வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும் எவராலும் எமக்கான தீர்வு இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

ஆட்சிப்பீடம் ஏறும் ஜனாதிபதிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற போது எமக்கான தீர்வு கிடைக்கப்பெறும் வழங்கப்படும் என வாக்குறுதிகளை மாத்திரமே அள்ளி வழங்கி வருகின்றனர். எமக்கான தீர்வு இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. எமது பிள்ளைகளை உறவுகளை தேடி பல தாய் தந்தையர் உறவுகளும் இறந்து போய் விட்டனர். எமக்கான தீர்வை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உள்ளூராட்சி...

உடுப்பிட்டி தொகுதியில் உள்ளூராட்சி உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மேலும், எமது கட்சி தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை சென்ற தடவை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே நாங்கள் எடுத்திருந்தோம். அதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டு, பின்னர் ஒன்றாக ஆட்சியமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல் நாங்கள் பிரித்துவிட்டோம் என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் முறையை கருத்தில் கொண்டு தனியாக ஒரு கட்சி ஆட்சியமைப்பது மிகவும் கஷ்டமான விடயம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே இப்பொழுது, நாங்கள் சிபாரிசு செய்த அந்த முறை, சிறந்தது என்ற எண்ணம் ஏனைய கட்சி தலைவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. ஆகவே அவர்களிடமும் நாங்கள் இதுகுறித்து பேசியிருக்கின்றோம்.

வெவ்வேறு இடங்களில் சிலவேளைகளில் சற்று வித்தியாசமான அணுகு முறைகளை நாங்கள் கையாள வேண்டியுள்ளது. இந்தத் தேர்தல் முறையை எப்படியாக எங்களுக்கு சாதகமாக பயன்படுத்துவது என்பது குறித்து ஒவ்வொரு சபையாக நாங்கள் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது - என்றும் அவர் கூறினார். (ஐ-02)

## இலங்கை - இந்தியா...

மற்றும் இந்திய தேசிய அனல் மின் சார கூட்டுத்தாபனத்தின் கூட்டு தொழில் முயற்சி கம்பனியால் நிர்மாணித்தல், உரிமை வகித்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் திருகோணமலை சம்பூரில் 50 மெகாவோற் (கட்டம் I) மற்றும் 70 மெகாவோற் (கட்டம் II) சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை சம்பூரில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலக்கரி மின்னுற்பத்தி நிலைய திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை மின் சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் கூட்டு தொழில்முயற்சி கம்பனியாக நிறுவப்பட்ட திருகோணமலை வலுசக்தி நிறுவனத்தின் மூலம் உத்தேச 50 மெகாவோற் சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உத்தேச திட்டத்தை அமுல்படுத்துவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வெளிநாட்டில் வசிப்பவரின் வங்கிக் கணக்கில் மோசடி!

### யாழ். வங்கி முகாமையாளர் மறியலில்

யாழ்ப்பாணம், பெப். 21

வெளிநாட்டில் வசிப்பவரின் நிலையான வைப்பு பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் வங்கி முகாமையாளர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் ஒருவர் நீண்ட காலத்துக்கு நிலையான வைப்பில் பெருந் தொகைப் பணத்தை வைப்பிலிட்ட பின்னர் வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

அவர் திடீரென நாடு திரும்பி தனது நிலையான வைப்பில் உள்ள பணத்தை மீளப் பெற வங்கிக்கு சென்ற போதே தனது பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதை அறிந்து , கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வங்கியின் முகாமையாளரை கைது செய்து விசாரணைகளின் பின்னர் யாழ் . நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (அ)

# வடக்குக் கடற்பரப்பில் 10 இந்திய மீனவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 21

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வந்துமீன்பிடியில் ஈடிபட்ட 10 இந்திய மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களும் மூன்று ட்ரோலர் படகுகளில் இழுவை மடியில் ஈடுபட்டவேளை கைது செய்யப்பட்டதோடு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மற்றும் காங்கேசன்துறை கடற்படை தளங்களுக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேற்படி 10 இந்திய மீனவர்களும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றங்களில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# தமிழக முதல்வருடன் ஜீவன் சந்திப்பு



சென்னை, பெப். 21

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. (அ)

# இளநீர் விலை 300 ரூபா

கொழும்பு, பெப். 21

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இளநீர் விலை கடந்த நாட்களில் 300 ரூபாயைத் தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


சிறிய அளவிலான இளநீர் 200 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

தற்போது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக இளநீருக்கான தேவை அதிகரித்ததே இந்த விலை உயர்வுக்கு காரணமாகும்.

இதற்கிடையில், சந்தையில் ஒரு தேங்காய் விலை 200 ரூபாயைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீதிபதிகள் உள்ளிட்ட தரப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!

### சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை



கொழும்பு, பெப். 21

**நீதிபதிகள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.**

நீதிபதிகளின் பாதுகாப்பு திரும்பப் பெறப்படும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

நாட்டில் அதிகரித்து வரும் குற்றங்களுக்கு மத்தியில், நீதிபதிகளின் பாதுகாப்பைத் திரும்பப் பெறவேண்டாம் என்றும், அவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

நீதிபதிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு நீக்கப்படும் என்று எழுத்து பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் தெரிவித்த சஜித் பிரேமதாஸ,

அதிகரித்து வரும் குற்றங்கள் காரணமாக இந்த நடவடிக்கையைத் தொடர வேண்டாம் என்றும், மாறாக அவர்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் பொது பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் மேலும் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ,

"நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஆனால் கடந்த காலங்களில் நீதிபதிகளின் பாதுகாப்பு நீக்கப்படும் என எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று சிவில் சமூகத்தினருக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பற்ற நிலை காணப்படுகிறது. ஊடகவியலாளர்களே இந்த மாதிரியான விடயங்களை அதிகமாக வெளியிடுகின்றார்கள்.

அவர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றன. நீதிமன்ற உத்தரவில் ஊடகவியலாளர் ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்த பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது.

அதனால் நீதிபதிகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தினர் உட்பட அனைத்து மக்களுக்கும் வழங்கும் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். நேற்று நடந்த சம்பவம் தொடர்பில் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பு தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" - என கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நீதிபதிகளின் பாதுகாப்பை நீக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், அச்சுறுத்தல் மதிப்பீடுகளின் அடிப்படையில் ஊடகவியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார். (அ)

# எம்.பிக்கள் பாதுகாப்பு விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை!

### சிறிநாத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பலமுறை சபாநாயகர் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவித்திருந்தபோதும் இதுவரை முன்னுரிமை வழங்கப்படவில்லை என அவர் கூறினார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு என்பது சபாநாயகரின் கைகளிலேயே தங்கியுள்ளதாகவும் இளையதம்பி சிறிநாத் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏதேனும் அசம்பாவிதங்கள் நடைபெற்ற பின்னர் பாதுகாப்பை வழங்குவதை விட அதற்கு முன்னர் பாதுகாப்பு வழங்குவது சிறந்தது என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றும்வரை போராட்டம் தொடரும்!


### வாக்குமூலத்தில் தெரிவித்த கஜேந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 21

"தையிட்டி திஸ்ஸ விகாரை பொது மக்களின் காணியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட விரோத விகாரை அகற்றப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம்", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ. கஜேந்திரன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பாக செல்வராஜா கஜேந்திரன், வாசுகி சுதாகரன், வேலன் சுவாமிகள் உள்ளிட்டோர் நேற்று வியாழக்கிழமை பலாலி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்தனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரை முன்பாக கடந்த 12ஆம் திகதி நடந்த போராட்டம் தொடர்பாக



விகாரதிபதி வழங்கிய பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டது.

நேற்றைய தினம் 12 மணிக்கு பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட அவர்கள் மூவரையும் சுமார் இரண்டு மணித்தியால காத்திருக்க வைத்த பின்னரே பொலிஸார் வாக்குமூலத்தை பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்,

"தெல்லிப்பழை பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் குறித்த விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களின் உறுதியுள்ள காணிகள் என்பதை அரச திணைக்களங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன என்ற விடயத்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில் தாம் குறித்த சட்ட விரோத விகாரை அகற்றப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்று வாக்குமூலத்தில் தெரிவித்ததாகக் கூறினார். (ஐ-05)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org